# தூத்துக்குடி தருவைகுளத்தில் தூய மரியன்னை கல்லூரி சார்பில் அமைத்துக் கொடுத்த மாடித்தோட்டம்



தூத்துக்குடி தூய மரியன்னை கல்லூரி கணினிப்பொறி அறிவியல்துறையின் உன்னத் பாரத் அபியான், தருவைக்குளத்தில் பத்து வீடுகளில் மாடித்தோட்டம் அமைத்துக் கொடுப்பதற்கான தொடக்க விழா 10.8.2019 அன்று நடந்தது. இதில் மக்களவை உறுப்பினர் கனிமொழி தலைமையேற்றார். கல்லூரி முதல்வர் முனைவர் லூசியா ரோஸ், கல்லூரியின் உன்னத் பாரத் அபியான் ஒருங்கிணைப்பாளர் முனைவர் குழந்தை தெரஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தருவைக்குளத்தில் இம்மாடித்தோட்டப் பணிகளை வாரந்தோறும் பேராசிரியர்களுடன் கணினி அறிவியல்துறை இளநிலை இரண்டாம் ஆண்டு மாணவியர்கள் செயல்படுத்தி வந்தனர். கடந்த 7.12.2019 அன்று நிறைவுவிழா நடைபெற்றது. அதற்கான ஏற்பாடுகளை கணினி அறிவியல் துறைத்தலைவர் ஞானதங்கம் செய்திருந்தார். எளிய முறையில் பாதுகாப்பான இயற்கை உரங்களைக் கொண்டு பயிரிடப்பட்ட முள்ளங்கி, பீட்ரூட், பீன்ஸ், வெண்டைக்காய் போன்ற காய்கறிகள் தங்களுக்கு அதிக உற்பத்தியை அளித்ததாக பயனடைந்த மக்கள் மகிழ்ந்து பாராட்டினர். இப்பணி தருவைக்குளத்து மக்களுக்கு மட்டுமின்றி மாணவியருக்கும் விவசாயத்தின் விழிப்புணர்வையும் கற்றுக் கொடுத்துள்ளது



# கருத்தரங்கம்

தூத்துக்குடி, டிச.21-

தூத்துக்குடி தூய மரியன்னை கல்லூரியில் மத்திய அரசின் தொழில்நுட்ப உயிரியல் துறை சார்பில் ஸ்டார் கல்லூரி திட்டத்தின் கீழ் கடல்சார் உயிரியல் என்ற தலைப்பிலான கருத்தரங்கம் நடந்தது. கல்லூரி முதல்வர் லூசியா ரோஸ் தலைமை தாங்கினார். மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி ரஞ்சித் கலந்து கொண்டு உயிரியல் முக்கியத்துவம் குறித்து பேசினார். பாரதிதாசன் கடற்சார் அறிவியல் துறை இணை பேராசிரியர் ஆர்தர் ஜேம்ஸ், கடலோர சுற்றுச்சூழலின் காலநிலை, வானிலை மாற்றங்கள் மற்றும் விளைவுகள் குறித்தும், மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி சுஜா, தூத்துக்குடி கடல் சார்ந்த நுண்பாசிகள் குறித்தும் விளக்கி பேசினர்.

கருத்தரங்கில் கல்லூரி மாணவிகள் திரளாக கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை ஸ்டார் கல்லூரி திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆரோக்கிய ஜெனிசியஸ் அல்போன்ஸ், தாவரவியல் துறை தலைவர் குளோரி, விலங்கியல் துறை தலைவர் ஹெர்மின் பசங்கா, தாவரவியல் துறை ஒருங்கிணைப்பாளர் புளோரா, விலங்கியல் துறை ஒருங்கிணைப்பாளர் ஜெம்மா ஹெர்மலின் ஜெஸி டயஸ் மற்றும் பேராசிரியைகள் செய்து இருந்தனர்.



தூத்துக்குடி செயின்ட் மேரிஸ் கல்லூரியில் நடைபெற்ற உலக எய்ட்ஸ் தினம் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப, அவர்கள், சிறப்பாக செயல்பட்டமைக்காக மருத்துவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கினார். அருகில், துணை இயக்குனர் சுகாதாரப்பணிகள் / மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுபாடு அலுவலர் மரு.ஜி.கிருஷ்ணலீலா, தூத்துக்குடி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.பி.திருவாசகமணி மற்றும் அலுவலர்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள் உள்ளனர் (09.01.2020)



தூத்துக்குடி செயின்ட் மேரிஸ் கல்லூரியில் நடைபெற்ற உலக எய்ட்ஸ் தினம் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள், உலக எய்ட்ஸ் தினத்தையொட்டி நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கினார். அருகில், துணை இயக்குனர் சுகாதாரப்பணிகள் / மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுபாடு அலுவலர் மரு.ஜிகிருஷ்ணலீலா, தூத்துக்குடி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.பி.திருவாசகமணி மற்றும் அலுவலர்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள் உள்ளனர் (09.01.2020)



தூத்துக்குடி செயின்ட் மேரிஸ் கல்லூரியில் நடைபெற்ற உலக எய்ட்ஸ் தினம் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள், உலக எய்ட்ஸ் தினத்தையொட்டி நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கினார். அருகில், துணை இயக்குனர் சுகாதாரப்பணிகள் / மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுபாடு அலுவலர் மரு.ஜிகிருஷ்ணலீலா, தூத்துக்குடி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.பிதிருவாசகமணி மற்றும் அலுவலர்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள் உள்ளனர் (09.01.2020)



தூத்துக்குடி செயின்ட் மேரிஸ் கல்லூரியில் நடைபெற்ற உலக எய்ட்ஸ் தினம் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள், உலக எய்ட்ஸ் தினத்தையொட்டி நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கினார். அருகில், துணை இயக்குனர் சுகாதாரப்பணிகள் / மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுபாடு அலுவலர் மரு.ஜிகிருஷ்ணலீலா, தூத்துக்குடி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.பிதிருவாசகமணி மற்றும் அலுவலர்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள் உள்ளனர் (09.01.2020)





தூத்துக்குடி செயின்ட் மேரிஸ் கல்லூரியில் நடைபெற்ற உலக எய்ட்ஸ் தினம் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., தலைமையில் கல்லூரி மாணவ, மாணவியர்கள், தொண்டு நிறுவனத்தினர் உலக எய்ட்ஸ் தின உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். அருகில், துணை இயக்குனர் சுகாதாரப்பணிகள் / மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுபாடு அலுவலர் மரு.ஜிகிருஷ்ணலீலா, தூத்துக்குடி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.பி.திருவாசகமணி மற்றும் அலுவலர்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள் உள்ளனர் (09.01.2020)

## தூய மரியன்னை கல்லூரியில்

# புத்தக வாசிப்பு நிகழ்ச்சி

தூத்துக்குடி, செப்.10: தூத்துக்குடி தூய மரியன்னை மகளிர் கல்லூரியில் மெகா புத்தக வாசிப்பு நிகழ்ச்சி நடந்தது. கல்லூரி முதல்வர் லூசியா ரோஸ் தலைமை வகித்து நிகழ்ச்சியை துவக்கி வைத்து பேசினார். கல்லூரி செயலாளர் சிபானா, சுய நிதிப்பாடப்பிரிவுகளின் இயக்குனர் ஜோசபின் ஜெயராணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் 2987 மாணவிகள், 162 பேராசிரியர்கள், 69 ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் கலந்து கொண்டு திருக்குறளை வாசித்தனர். அவர்கள் கைகளில் தேசியக்கொடியை ஏந்தியபடி திருக்குறளில் 5 அதிகாரங்களை ஒருங்கிணைந்து வாசித்தனர். பின்னர் தாங்கள் வாசித்த பகுதியில் இருந்து ஒரு அதிகாரத்தை மனப்பாடமாக இணைந்து ஒப்புவித்தனர். இந்த நிகழ்ச்சி இந்தியா புக் ஆப் ரெக்கார்டுக்கு அனுப்ப முடிவு செய்யப்பட்டு உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி நகரத்தில் பாஜக அலுவலகம் திருவள்ளூர் மேற்கு மாவட்ட தலைவர் திரு எம்.அஸ்வின் குமார் அவர்களின் அறிவுறுத்தலின்படி மாவட்ட பொதுச் செயலாளர் மற்றும் திருத்தணி சட்டமன்ற பொறுப்பாளர் அவர்கள் திரு ஸ்ரீ ஜெயகணேஷ் அவர்களின் ஆலோசனைப்படி மற்றும் மத்திய அரசு நலத்திட்ட பிரிவு மாவட்ட தலைவர் திரு நித்யானந்தம் அவர்களின் வழிகாட்டுதலின் மற்றும் ஒன்றிய தலைவர் V. ஜான் மற்றும் இதன் கன்று கொண்ட NV ரமேஷ் மற்றும் திருத்தணி நகர மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் திரு விக்னேஷ் திரு கருணா திரு பபூ மற்றும் சகோதரி ராதிகா சுரேஷ் பாரம்பரிய சிறப்பாக 60 பெருக்கு ஆயுஷ்மான் பாரத் இலவச காப்பீடு திட்ட போட்டு வழங்கப்படுகின்றது.

# சென்னை அம்பத்தூர் அருகே அடுக்கு மாடி கட்டிடத்தில் பயங்கர தீ விபத்து!



### சென்னை அம்பத்தூரில் பரபரப்பு:

சென்னை அம்பத்தூர் அருகே வாசனை திரவியங்கள் தயாரிக்கும் அடுக்குமாடி கட்டிடத்தில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டு இரண்டு மணி நேரமாக தீயை அணைக்கும் போராட்டத்தில் தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

### வாசனை திரவியங்கள் தயாரிக்கும் குடோனில் தீ விபத்து:

சென்னை அம்பத்தூர் கதிர்வேடு விநாயகர் கோவில் தெருவில் அடுக்குமாடி கட்டிடத்தில் இயங்கி வரும் வாசனை திரவியங்கள் தயாரிக்கும் குடோன் மற்றும் அலுவலகத்தில் இன்று காலை பயங்கர தீ விபத்து ஏற்பட்டுள்ளது. ஒகே ஏஜென்சி எனப்படும் இந்த குடோனில் ஏற்பட்ட தீ விபத்தை இரண்டு மணி நேரமாக போராடி தீயணைப்பு வீரர்கள் தற்போது கட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

### எப்படி விபத்து ஏற்பட்டது?

இந்த குடோனில் வாசனை திரவியங்கள் தயாரிக்கப்பட்டு பேக்கிங் செய்யப்பட்டு வந்துள்ளது. இந்த குடோனின் தரைத்தளத்தில் அலுவலகமும் முதல் தளத்தில் பேக்கிங் செய்வதற்கான பொருட்களும் மூன்றாவது தளத்தில் வாசனை திரவியங்கள் தயாரிக்கும் மிஷின்களும் வைக்கப்பட்டிருந்ததாக தெரிகிறது.

### அதிர்ஷ்டவசமாக உயிர் சேதம் தவிர்ப்பு

இந்நிலையில் தரைத்தளத்தில் இயங்கி வந்த குடோனில் மின் இணைப்பில் கோளாறு ஏற்பட்டு தீ விபத்து ஏற்பட்டதாக தெரிகிறது. தரைதளத்தில் ஏற்பட்ட தீ மளமளவென அடுத்தடுத்த தளங்களுக்கும் வேகமாக பரவியுள்ளது. தீ விபத்து காலை சுமார் எட்டு முப்பது மணி அளவில் நடந்ததால், அலுவலகத்தில் அதிர்ஷ்டவசமாக ஊழியர்கள் யாரும் இல்லாததால் பெரும் உயிர் சேதம் தவிர்க்கப்பட்டுள்ளது.

### தீயை அணைக்க 2 மணி நேரம் போராட்டம்

இதனையடுத்து தீ விபத்து குறித்து தகவல் அறிந்த மாதவரம், கொளத்தூர் மற்றும் அம்பத்தூர் தீயணைப்பு துறை வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து மூன்று வாகனங்களில் சுமார் இரண்டு மணி நேரத்திற்கு மேலாக 15 தீயணைப்பு வீரர்கள் போராடி தீயை கட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். இந்த தீயினால் அப்பகுதியில் கரும்புகை சூழ்ந்து பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

## தூத்துக்குடி

# தூய மரியன்னை கல்லூரி நடத்திய 2024 மெகா வேலை வாய்ப்பு முகாம்.!



தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் நான் முதல்வன் மாதிரி சுயநிதி வேலை வாய்ப்புத் திட்டத்துடன் இணைந்து தூத்துக்குடி தூய மரியன்னை கல்லூரி நடத்திய மெகா வேலை வாய்ப்பு முகாம் 2024ல் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 40க்கும் மேற்பட்ட நிறுவனங்களும் 300க்கும் மேற்பட்ட வேலை வாய்ப்பு தேடும் பட்டப்படிப்பு முடித்த இளைஞர்களும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வை கல்லூரி செயலாளர் முனைவர் அருட்சகோதரி. சி. சரிபாலா வாழ்த்துரை வழங்கி தொடங்கி வைத்தார். மேலும் கல்லூரி முதல்வர் முனைவர் அருட்சகோதரி ஜெஸ்ஸி ஃபெர்னாண்டோ, சுயநிதி பிரிவு இயக்குனர் அருட்சகோதரி ஜோசப்பின் ஜெயராணி மற்றும் துணை முதல்வர் முனைவர் அருட்சகோதரி எஸ்பாஞ்சிலா ஆகியோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். மேலும் நிபுணர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளவும், வேலை வாய்ப்பு திறன்களை மேம்படுத்தும் விதமாகவும் இந்த வேலை வாய்ப்பு முகாம் ஒரு தளமாக அமைந்தது. இம்முகாமின் சிறப்பம்சமாக, பங்கேற்பாளர்கள் 380 நபர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் நான் முதல்வன் வேலை வாய்ப்பு மேலாளர் திரு தினேஷ் மற்றும் தூய மரியன்னை கல்லூரியின் தொழில் வழிகாட்டல் மற்றும் வேலைவாய்ப்பு குழுவின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஃப்ளோரா தன் உறுப்பினர்களுடன் இணைந்து செய்திருந்தார்கள்.

# விருதுநகர் பட்டாசு ஆலை வெடி விபத்து.!

## 4 பேர் உயிரிழப்பு!



விருதுநகர் மாவட்டத்தில் பட்டாசு ஆலை வெடி விபத்துக்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. உயிரிழப்புகளும் பதிவாகி வருகின்றன. நேற்று காலை எதிர்பாராத விதமாக விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே பந்துவார்பட்டியில் பட்டாசு ஆலை வெடி விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விபத்தில் 4 பேர் உயிரிழந்துள்ளனர். இது தொடர்பாக விசாரிக்கையில், பந்துவார்பட்டியில் குரு ஸ்டார் ஃபையர் ஒர்க்ஸ் ஆலையில் இன்று காலை பட்டாசு தயாரிப்பதற்காக வேதிப் பொருள்களை கலந்து கொண்டிருக்கும் போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் மாரிசாமி, ராம் குமார், மோகன், செல்வகுமார் ஆகிய நான்கு பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

விபத்து குறித்து தகவல் கிடைத்ததும் ஏழாயிரம் பண்ணையிலிருந்து தீயணைப்பு வாகனங்கள் விரைந்தன. தீயணைப்பு வீரர்கள் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகளில் ஈடுபட்டனர்" என்று கூறுகின்றனர். இந்த ஆலை அச்சங்குளத்தைச் சேர்ந்த சகாதேவனுக்கு சொந்தமானது என்றும் டி.ஆர்.ஓ லைசன்ஸ் பெற்றே இயங்கி வந்ததாகவும் கூறுகின்றனர். 15 அறைகள் கொண்ட இந்த ஆலையில் மூன்று அறைகள் தரைமட்டமானது. சாத்தூர் தாலுகா காவல் மற்றும் வருவாய் துறை அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

...POO MORNING TAMIL DAILY and Printed at J.M. PROCESS No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road ... CHENNAI - 600002 Editor S.SHALINI

# தூத்துக்குடி கல்லூரியில் யோகா நிகழ்ச்சி

தூத்துக்குடி, ஜூன் 23-
தூத்துக்குடி தூய மரியன்னை கல்லூரியில் (தன்னாட்சி) யோகா குழு மற்றும் தேசிய மாணவர் படை சார்பில் \"பெண்களுக்கு அதிகாரமளித்தலுக்கான யோகா\" என்ற தலைப்பில் கருத்தரங்கு நடந்தது. இதில் யோகா என்ற தலைப்பில் யோகா செய்முறை பயிற்சி வழங்கப்பட்டது. பேராசிரியை மாலதி ஸ்கை யோகா உடல் மற்றும் மன நலனை மேம்படுத்துவதற்கும், அதன் மூலம் அதிகாரமளிப்பதற்கும் யோகா எவ்வாறு ஒரு சக்திவாய்ந்த கருவியாக செயல்பட முடியும் என்பதை எடுத்துரைத்தார். இதில் 2ம் ஆண்டு பட்டப்படிப்பு மாணவிகள் மற்றும் தேசிய மாணவர் படை மாணவிகள் பங்கேற்றனர். பல்வேறு யோகா ஆசனங்களை நிகழ்த்தினார்கள். கல்லூரியின் செயலாளர் ஷிபானா, முதல்வர் ஜெஸ்ஸி பெர்னாண்டோ, துணை முதல்வர் எழிலரசி, மற்றும் சுய நிதிப்பாடப் பிரிவுகளின் இயக்குனர் ஜோசபின் ஜெயராணி உள்பட பலர் கலந்துகொண்டனர். ஏற்பாடுகளை உதவிப் பேராசிரியர்கள் மேரி பிரியா, அமலா ஜோதி கிரேஸ் ஆகியோர் ஏற்பாடுகளை செய்திருந்தனர். இறுதி நிகழ்வு, ஓவியப் போட்டி ஜூன் 24 அன்று நடத்தப்படும்.


தூத்துக்குடி தூய மரியன்னை கல்லூரியில் சர்வதேச யோகா நிகழ்ச்சி நடந்தது.

8:11 AM








# 'மாணவ, மாணவியர்கள் தான் எதிர்கால இந்தியா'

## மேயர் ஜெகன் பேச்சு








Golden

## அந்த நாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததே தோழியே





## மாற்றுத் திறனாளிகள் தினத்தை முன்னி

## கிராம உதயம் சார்பில் ரத்த தான முக

## மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டி பிச்சர் கீதா ஜீவன் வழங்கினார்



## புனித மதர் தெரசா பொறியியல் கல்லூரி மாணவ

## கிராமப்புற விவசாயிகளுக்கு விழிப்புணர்வு பயி



## ...ண்டு வந்த கிராமம் முக்காடிய ஆட்சியாளர்கள்

4/4



# தூத்துக்குடி தூய மரியன்னை மகளிர்
# கல்லூரியில் பொங்கல் விழா

**தூத்துக்குடி, ஜன.13**

தூத்துக்குடி தூய மரியன்னைக் கல்லூரியில் பொங்கல் திருவிழா கல்லூரி செயலர் அருட்சகோதர் சிபானா தலைமையில் நடைபெற்றது. விழாவில் ஒவ்வொரு துறை மாணவிகளும் பொங்கல் வைத்து பாரம்பரிய முறைப்படி பொங்க கொண்டாடினர்.

விழாவில் கல்லூரி முதல்வ அருட்சகோதர் ஜெசி பெர்னான்டே துணை முதல்வர் குழந்தை தெர சுயபிரதிநிதி பிரிவு இயக்குநர் ஜோஸ்பி ஜெயராணி உட்பட பலர் கலந் கொண்டனர்.

தினகரன் தூத்துக்குடி



சாத்தான்குளம், செப். 29: சாத்தான்குளம் அருகே சாலைபுதூர் ஆரம்ப சுகாதார நிலையம் சார்பில் பள்ளி மாணவர்களுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்கப்பட்டது.

பேய்க்குளம் அடுத்த பழனியப்பபுரம் டிஎன்டிடிஏ நடுநிலைப்பள்ளியில் மாணவ-மாணவிகளுக்கு கருங்கடல் பஞ். தலைவர் நல்லதம்பி நிலவேம்பு குடிநீர் வழங்கினார். இதில் சுகாதார ஆய்வாளர் ஜேசுராஜ், தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், டெங்கு மஸ்தூர பணியாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். மீரான்குளம் டிஎன்டிடிஏ நடுநிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியர் நேபல் சலோமி மாணவ, மாணவிகளுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்கினார். செங்குளம் யூனியன் துவக்கப்பள்ளியில் தலைமை ஆசிரியர் ஜெயராணி எலிசபெத் நிலவேம்பு குடிநீர் வழங்கினார். கீழ அம்பலசேரி துவக்கப்பள்ளியில் தலைமை ஆசிரியை தயானிஷ் மரியாள் நிலவேம்பு குடிநீர் வழங்கினார். இதேபோல் நார்த்தன்குறிச்சி கிராமத்தில் சுகாதார ஆய்வாளர்கள் ஜேசுராஜ், மகேஷ்குமார் மற்றும் டெங்கு மஸ்தூர் பணியாளர்கள் வழங்கினர்.

## போலி விளம்பரங்கள் குறித்து

# தூத்துக்குடி கல்லூரியில் விழிப்புணர்வு கருத்தரங்கு



போலி விளம்பரங்கள் குறித்து தூத்துக்குடி தூய மரியன்னை கல்லூரியில் விழிப்புணர்வு கருத்தரங்கு நடந்தது.

தூத்துக்குடி, செப்.29: போலி விளம்பரங்கள் குறித்து தூத்துக்குடி தூய மரியன்னை கல்லூரியில் விழிப்புணர்வு கருத்தரங்கு நடந்தது.

தூத்துக்குடி தூய மரியன்னை தன்னாட்சி கல்லூரியில் போலி விளம்பரங்கள் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு நடந்தது. கல்லூரிச் செயலாளர் சிபானா, கல்லூரி முதல்வர் ஜெஸி பர்னாண்டோ, துணை முதல்வர் குழந்தை தெரஸ் மற்றும் சுயநிதி பிரிவின் இயக்குநர் ஜோஸ்பின் ஜெயராணி வழிகாட்டுதலின் படி நடைபெற்ற இக்கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற ஜேசிஐ மண்டல பயிற்சியாளர் கவுசல்யா கருத்துரை ஆற்றினார். அப்போது அவர் கூறுகையில் "ஒன்றிய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரப்படுத்தல் ஆணையம், அகில இந்திய தேசிய நுகர்வோர் குறை தீர்ப்பு ஆணையம் மற்றும் மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் ஆகியவை போலி விளம்பரங்களை அடையாளம் கண்டு தகுந்த முறையில் நடவடிக்கை எடுத்துவருகின்றன. நுகர்வோராகிய நாம் போலி விளம்பரங்களை அடையாளம் கண்டுகொள்ளும் விழிப்புணர்வு கொண்டவர்களாக இருக்கவேண்டும்" என்றார்.

கூட்டத்தில் பங்கேற்ற நுகர்வோர் மன்ற மாணவிகள், தங்கள் கேள்விகளுக்கு விளக்கம் பெற்றதுடன் சிறப்பு விருந்தினரால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்து பரிசுகளை வென்றனர். ஏற்பாடுகளை நுகர்வோர் மன்ற பொறுப்பாளர்கள் ரதி, பிரியங்கா மற்றும் மனுவேல் இன்பனி செய்திருந்தனர்.

# தூத்துக்குடி மரியன்னை கல்லூரியில் மின்னணுவியல் பயன்பாட்டு கருத்தரங்கு

தூத்துக்குடி, செப். 24-

தூத்துக்குடி தூய மரியன்னை கல்லூரியில் மனிதவள மேம்பாட்டிற்கான மின்னணுவியல் பயன்பாடு குறித்த கருத்தரங்கு நடந்தது.

தூத்துக்குடி தூய மரியன்னை கல்லூரியில் ஆங்கிலத்துறை சுயநிதி பிரிவு சார்பாக மொழி மற்றும் இலக்கியத்துறையில் மனிதவள மேம்பாட்டிற்கான மின்னணுவியல் பயன்பாட்டு ஆய்வு என்ற தலைப்பிலான ஒருநாள் தேசிய கருத்தரங்கு நடந்தது. இதில், முதல்வர் ஜெனி பெர்னாண்டோ தலைமை வகித்தார். சுயநிதி பிரிவு இயக்குநர் ஜோஸ்பின் ஜெயராணி வாழ்த்துரை வழங்கினார்.

ஹைதராபாத்தை சேர்ந்த பதிப்பக வல்லுநரும், ஆராய்ச்சி ஆலோசகருமான பேராசிரியர் மனு மங்காட்டு, இலக்கியத்துறையில் மனிதவள மேம்பாட்டிற்கான மின்னணுவியல் பயன்பாடு என்ற தலைப்பில் பேசினார். குஜராத் பாவ்நகர் மகாராஜா கிருஷ்ணகுமார்சிங்ஜி பல்கலைக்கழகத்தின் உதவி பேராசிரியர் திலீப் பராத், மின்னணு தொழில்நுட்பத்தின் கற்பித்தல் நுணுக்கங்கள் குறித்து விளக்கமளித்தார்.

கருத்தரங்கில் நிகழ்நிலை மற்றும் முடக்கநிலை தொகுதிகள் மூலம் காகித விளக்க காட்சிகள் நடத்தப்பட்டன. மதுரை அமெரிக்கன் கல்லூரியின் இணைப்பேராசிரியர் ஞானசேகர் மதிப்புரை வழங்கி மின்னணு மயமாக்கலின் முக்கியத்துவத்தையும் கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சியில் அதன் பயன்பாடு மற்றும் விளைவுகள் குறித்தும் எடுத்துரைத்தார். திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி உதவி பேராசிரியர் சேவியர் பிரதீப்சிங் நிறைவுரை ஆற்றினார்.

ஏற்பாடுகளை சுயநிதி பிரிவு ஆங்கிலத்துறை பேராசிரியர்கள் செய்திருந்தனர்.



Members of the St Mary's College women's Kabbadi team who secured the first place in the Arun Memorial Club Kabbadi tournament held in Thoothukudi | EXPRESS

# Marian women's kabaddi team wins memorial trophy

**EXPRESS NEWS SERVICE** @ Thoothukudi

IN a state-level kabaddi tournament for women, the Marian Kabaddi team of St Mary's College secured the first place among the 19 teams that participated in the tournament conducted by Arun Memorial Club in association with Thoothukudi District Amateur Kabaddi Association at Ganeshapuram. The management, staff and student community of the college have extended their hearty congratulations to the team. As many as 19 women's kabaddi teams hailing from across the state participated in the tournament. The Marian girls defeated Bharathi Sports Club, Tirunelveli scoring 41-22 in the quarterfinal, and defeated Lady Doak College, Madurai by scoring 43-19 in the semifinals. In the finals, St.Mary's College played against Gaandhamalai Club, Namakkal, and won the match by scoring 37-23 to clinch the Arun Memorial trophy.

BREAKING NEWS

தின மடை

FILASH NEWS

DINA MADAI
MORNING TAMIL DAILY PAPER

Email: dinamadi2021@gmail.com

தேசிய காலை நாளிதழ் | DINA MADAI \ தினமடை | WWW.Dinamadai.com

**15.09.2023** **தூத்துக்குடி**



தூத்துக்குடி தூய மரியன்னை கல்லூரியில் (தன்னாட்சி) உணவு கலப்படம் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது . இதில் தூய மரியன்னை கல்லூரி (தன்னாட்சி),நுண்ணுயிரியல் துறை, உதவி பேராசிரியர், முனைவர். சா. சிலுவை கிருபாகரி அனிஸ்சியா, சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்டார்

மாவட்ட செய்தியாளர். அ.ரவி

தினகரன் தூத்துக்குடி



சாத்தான்குளம், செப். 29: சாத்தான்குளம் அருகே சாலைபுதூர் ஆரம்ப சுகாதார நிலையம் சார்பில் பள்ளி மாணவர்களுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்கப்பட்டது.

பேய்க்குளம் அடுத்த பழனியப்பபுரம் டிஎன்டிடிஏ நடுநிலைப்பள்ளியில் மாணவ-மாணவிகளுக்கு கருங்கடல் பஞ். தலைவர் நல்லதம்பி நிலவேம்பு குடிநீர் வழங்கினார். இதில் சுகாதார ஆய்வாளர் ஜேசுராஜ், தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், டெங்கு மஸ்தூர பணியாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். மீரான்குளம் டிஎன்டிடிஏ நடுநிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியர் நேபல் சலோமி மாணவ, மாணவிகளுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்கினார். செங்குளம் யூனியன் துவக்கப்பள்ளியில் தலைமை ஆசிரியர் ஜெயராணி எலிசபெத் நிலவேம்பு குடிநீர் வழங்கினார். கீழ அம்பலசேரி துவக்கப்பள்ளியில் தலைமை ஆசிரியை தயாளிஷ் மரியாள் நிலவேம்பு குடிநீர் வழங்கினார். இதேபோல் நார்த்தன்குறிச்சி கிராமத்தில் சுகாதார ஆய்வாளர்கள் ஜேசுராஜ், மகேஷ்குமார் மற்றும் டெங்கு மஸ்தூர் பணியாளர்கள் வழங்கினர்.

## போலி விளம்பரங்கள் குறித்து

# தூத்துக்குடி கல்லூரியில் விழிப்புணர்வு கருத்தரங்கு



▶ போலி விளம்பரங்கள் குறித்து தூத்துக்குடி தூய மரியன்னை கல்லூரியில் விழிப்புணர்வு கருத்தரங்கு நடந்தது.

தூத்துக்குடி,செப்.29: போலி விளம்பரங்கள் குறித்து தூத்துக்குடி தூய மரியன்னை கல்லூரியில் விழிப்புணர்வு கருத்தரங்கு நடந்தது.

தூத்துக்குடி தூய மரியன்னை தன்னாட்சி கல்லூரியில் போலி விளம்பரங்கள் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு நடந்தது. கல்லூரிச் செயலாளர் சிபானா, கல்லூரி முதல்வர் ஜெஸி பர்னாண்டோ, துணை முதல்வர் குழந்தை தெரஸ் மற்றும் சுயநிதி பிரிவின் இயக்குநர் ஜோஸ்பின் ஜெயராணி வழிகாட்டுதலின் படி நடைபெற்ற இக்கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற ஜேசிஐ மண்டல பயிற்சியாளர் கவுசல்யா கருத்துரை ஆற்றினார். அப்போது அவர் கூறுகையில் "ஒன்றிய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரப்படுத்தல் ஆணையம், அகில இந்திய தேசிய நுகர்வோர் குறை தீர்ப்பு ஆணையம் மற்றும் மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் ஆகியவை போலி விளம்பரங்களை அடையாளம் கண்டு தகுந்த முறையில் நடவடிக்கை எடுத்துவருகின்றன. நுகர்வோராகிய நாம் போலி விளம்பரங்களை அடையாளம் கண்டுகொள்ளும் விழிப்புணர்வு கொண்டவர்களாக இருக்கவேண்டும்" என்றார்.

கூட்டத்தில் பங்கேற்ற நுகர்வோர் மன்ற மாணவிகள், தங்கள் கேள்விகளுக்கு விளக்கம் பெற்றதுடன் சிறப்பு விருந்தினரால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்து பரிசுகளை வென்றனர். ஏற்பாடுகளை நுகர்வோர் மன்ற பொறுப்பாளர்கள் ரதி, பிரியங்கா மற்றும் மனுவேல் இன்பல செய்திருந்தனர்.

LIVE BREAKING NEWS
விரைவு செய்தி RNI NO:TNTAM1\82250
தமிழ் காலை நாளிதழ்
தின மடை
FILASH NEWS DINA MADAI MORNING TAMIL DAILY PAPER
Email: dinamadi2021@gmail.com
தேசிய காலை நாளிதழ் DINA MADAI \ தினமடை WWW.Dinamadai.com

23.09.2023 தூத்துக்குடி



தூத்துக்குடி தூய மரியன்னை கல்லூரி தன்னாட்சியில் ஆங்கிலத்துறை சுயநிதி பிரிவு சார்பாக மொழி மற்றும் இலக்கியத்துறையில் மனிதவள மேம்பாட்டிற்கான மின்னணுவியல் பயன்பாட்டு ஆய்வு என்ற தலைப்பிலான ஒரு நாள் தேசிய கருத்தரங்கு நடைபெற்றது

ஹைதராபாத்தை சேர்ந்த பதிப்பக வல்லுநரும் கவிஞர் மற்றும் ஆராய்ச்சி ஆலோசகருமான முனைவர் மனு மங்காட்டு இலக்கியத்துறையில் மனிதவள மேம்பாட்டிற்கான மின்னணுவியல் பயன்பாடு என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்

மாவட்ட செய்தியாளர். அ.ரவி




↑ தூத்துக்குடி தூய மரியன்னை மகளிர் கல்லூரியில் நடைபெற்ற பவள விழா நிறைவு நிகழ்ச்சியில் பவள விழா மலர் வெளியிடப்பட்டது.

# மரியன்னை கல்லூரி பவள விழா நிறைவு நிகழ்ச்சி

• தூத்துக்குடி

தூத்துக்குடி தூய மரியன்னை கல்லூரியின் 75-ம் ஆண்டு பவள விழா நிறைவு நிகழ்ச்சி நடைபெற்றது. பேராசிரியர் பி.செரினா மார்க்ரட் வரவேற்றார். சென்னை தலைமை அருட்சகோதரி எஸ். டெக்லா, தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர் ஸ்டீபன், திருச்சி கிழக்கு தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் எஸ்.இனிகோ இருதயராஜ் கலந்துகொண்டனர். தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப பேரவை செயலாளர் ஸ்ரீனிவாசன், அருட்சகோதரிகள் எப்.மேரி ஜாய்ஸ் பேபி, ரோசாரி, கென்சி, ரோஸ்லின் மேரி உள்ளிட்டோர் பேசினர். மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஏற்பாடுகளை கல்லூரி செயலாளர் அருட்சகோதரி சி.சிபானா, முதல்வர் அருட்சகோதரி ஜெஸி பெர்னான்டோ மற்றும் பேராசிரியர்கள், மாணவிகள் செய்திருந்தனர். மேலாண்மை மற்றும் பொருளாதார கல்வித்துறை தலைவர் பெர்னான்டோ அலெக்ஸாண்ட்ரியா நன்றி கூறினார்.

# மலேசிய உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்துடன் தூத்துக்குடி மகளிர் கல்லூரி புரிந்துணர்வு ஒப்பந்தம்



செய்தியாளர்களிடம் பேசிய தூய மரியன்னை கல்லூரி முதல்வர் ஜெஸ்ஸி. உடன், செயலர் சிபானா, உதவிப் பேராசிரியர் அ.ம. சோனல் உள்ளிட்டோர்.

**தூத்துக்குடி ஆக. 1:** மலேசிய உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம், தூத்துக்குடி தூய மரியன்னை மகளிர் கல்லூரி இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமானதாக, கல்லூரி முதல்வர் ஜெஸ்ஸி, செயலர் சிபானா ஆகியோர் தெரிவித்தார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் அவர்கள் செவ்வாய்க்கிழமை கூறியது: மலேசியாவில் கடந்த ஜூலை 21, 22, 23 ஆகிய 3 நாள்கள் உலகத் தமிழ் ஆய்வு மாநாடு நடைபெற்றது. இக்கல்லூரிச் செயலர் சி. சிபானா தலைமையில், தமிழ்த் துறை உதவிப் பேராசிரியர் அ.ம. சோனல், பேராசிரியர்கள், மாநாட்டின் பல்வேறு அமர்வுகளில் தலைவர்களாகவும், கட்டுரையாளர்களாகவும் பங்கேற்றனர்.

மாநாட்டில் தூய மரியன்னை கல்லூரி- மலேசிய உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமானது. கல்லூரி முதல்வர் ஜெஸ்ஸி, செயலர் சி. சிபானா, தமிழ்த் துறை உதவிப் பேராசிரியர் அ.ம. சோனல், உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத் தலைவர் டான் ஸ்ரீ மாரிமுத்து, செயலர் நந்தன் மாசிலாமணி, மலேசியா பேராசிரியர் கிருஷ்ணன் மணியம் ஆகியோர் கையொப்பமிட்டனர்.

இதன்மூலம் இரு நிறுவனங்களிடையே பல்வேறு கலாசார, பண்பாடு, கல்வி முறையில் அறிவுசார் பரிமாற்றங்கள் நடைபெறும். கல்லூரி மாணவியர் பயனடைவர் என்றனர் அவர்கள்.

# மலேசியா உலக தமிழ்சங்கம், தூத்துக்குடி மரியன்னை கல்லூரி புரிந்துணர்வு ஒப்பந்தம்



கல்லூரி முதல்வர் ஜெஸ்ஸி, செயலர் சிபானா, தமிழ்த்துறை பேராசிரியை சோனல் ஆகியோர் நேற்று நிருபர்களுக்கு பேட்டியளித்தனர்.

**தூத்துக்குடி, ஆக. 2–**
மலேசியாவில் நடந்த உலகத்தமிழ் ஆய்வு மாநாட்டில் தூத்துக்குடி தூய மரியன்னை கல்லூரி செயலர் பேராசிரியை சிபானா தலைமையில் மாநாட்டின் தூத்துக்குடி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் சோனல், பேராசிரியர்கள் மரிய சகாய ஷர்மிளா, சண்முகஜோதி, ஜோஸ்லின், வினிதா, இருதய அண்டோனட் ஜோபியா, லட்சுமி ஆகியோர் பல்வேறு அமர்வுகளில் அமர்வுத் தலைவர்களாகவும், கட்டுரையாளர்களாகவும் பங்கேற்றனர்.

மாநாட்டில் தூய மரியன்னை கல்லூரி மற்றும் IATR உடனான புரிந்துணர்வு ஒப்பந்தமும் கையெழுத்தானது. இதில் கல்லூரி முதல்வர் பேராசிரியை ஜெஸ்ஸி பெர்ணாண்டோ, செயலர் பேராசிரியை சிபானா, தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் பேராசிரியை சோனல், மலேசியாவை சேர்ந்த IATR தலைவரும் பேராசிரியருமான டான் ஸ்ரீ மாரிமுத்து, IATR செயலர் நந்தன் மாசிலாமணி, பேராசிரியர்கிருஷ்ணன் மணியம் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

மலேசியா சென்று திரும்பிய கல்லூரி முதல்வர் ஜெஸ்ஸி, செயலர் சிபானா, தமிழ்த்துறை பேராசிரியை சோனல் ஆகியோர் நேற்று நிருபர்களிடம் கூறுகையில்,

புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் தூத்துக்குடி, மலேசியா இடையே கலாச்சார பண்பாடு வளரும். அங்குள்ள கல்லூரி பேராசிரியர்கள் இங்கு வந்து கல்வி போதிக்கும் போது கல்வியில் புதிய மாற்றங்கள் உருவாகும். அங்குள்ள கல்விமுறை நமக்கு தெரியும். அது போன்று நமது கல்வி முறை அவர்களுக்கு நாம் அங்கு செல்லும் போது கிடைக்கும்.

இது மட்டுமின்றி இதன் மூலம் அதிக வேலைவாய்ப்புகள் உருவாகும். நம் கல்லூரி மாணவிகளுக்கு மலேசியாவில் பல்வேறு வேலைவாய்ப்புகள் இதன் மூலம் கிடைக்கும். தமிழ் வளர்ச்சிக்கும் இது உத[illegible]வும். புதிய கல்வி முறை[illegible] உருவாகும் வாய்ப்[illegible] கள் ஏற்படும். வேலை[illegible] வாய்ப்புகளுடன் கூடி[illegible] கல்விக்கு முக்கியத்[illegible]வம் கிடைக்கும் எ[illegible]றனர்.

# 'மாணவிகள் கைப்பேசியை எச்சரிக்கையாக கையாள வேண்டும்'



நிகழ்ச்சியில் பேசிய சைபர் கிரைம் ஏடிஎஸ்பி உன்னிகிருஷ்ணன்.

**தூத்துக்குடி, ஜூலை 20:** மாணவிகள் கைப்பேசியை எச்சரிக்கையாகக் கையாள வேண்டும் என்றார், மாவட்ட சைபர் கிரைம் ஏடிஎஸ்பி உன்னி கிருஷ்ணன்.

தூத்துக்குடி செயின்ட் மேரீஸ் மகளிர் கல்லூரியில் புதன்கிழமை நடைபெற்ற சைபர் கிரைம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று அவர் பேசியது: சைபர் கிரைம் தொடர்பாக காவல் துறைக்கு பல்வேறு புகார்கள் வருகின்றன. குறிப்பாக, கைப்பேசி மூலம் மக்களை எளிதாக ஏமாற்றி, அவர்களின் வங்கிக் கணக்கிலிருந்து பணத்தைத் திருடும் சம்பவங்கள் அதிகம் நிகழ்கின்றன. எனவே, மாணவிகள் கைப்பேசியை கவனமாகக் கையாள வேண்டும். ஏமாற்று பேர்வழிகளிடம் சிக்கிக்கொள்ளக் கூடாது. கைப்பேசி மூலம் தேவையில்லா தகவல்களைப் பரிமாற்றம் செய்வதைத் தவிர்க்க வேண்டும். மாணவிகள் விழிப்புணர்வுடன் இருப்பதுடன், பிறருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றார் அவர்.

கல்லூரி துணை முதல்வர் குழந்தை தெரசா தலைமை வகித்தார். உதவி ஆய்வாளர்கள் அச்சுதன், அபிராமி, ஒருங்கிணைப்பாளர் அமுதா, பேராசிரியர்கள், மாணவிகள் பங்கேற்றனர். எஸ்எஸ்சி இயக்குநர் ஜோஸ்பின் ஜெயராணி வரவேற்றார்.

தியாகு பா.முத்து

## காலாங்கரையில்

# உணவுத் திருவிழா



தூத்துக்குடி, நவ. 24: தூத்துக்குடி தூய மரியன்னை கல்லூரி கணிதத்துறை மற்றும் சுடர் அறக்கட்டளை சார்பில், காலாங்கரையில் உணவு திருவிழா நடைபெற்றது. கல்லூரி செயலர் ஷிபானா தலைமை வகித்து துவக்கி வைத்தார். சுடர் அறக்கட்டளை நிறுவனர் ஷாலினி உணவின் முக்கியத்துவம், சத்தான, ஆரோக்கியமான உணவு குறித்து பள்ளி மாணவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மாணவர்கள் அனைவரும் தங்கள் வீடுகளில் இருந்து விதவிதமான உணவுகளை கொண்டு வந்து பார்வைக்கு வைத்தனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை உன்னத்பாரத் அபியான் திட்ட ஒருங்கிணைப்பாளர் குழந்தைதெரஸ், டியூட்டர் பெவின் ஆகியோர் செய்திருந்தனர்.

இதில் காலாங்கரை பள்ளி மாணவர்கள், குழந்தைகள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

## பல்கலைக்கழக கபடி போட்டியில்

# மரியன்னை கல்லூரி சாம்பியன்




தூத்துக்குடி, அக். 12: நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக அளவில் நடைபெற்ற கல்லூரி மாணவிகளுக்கான கபடி போட்டியில் தூத்துக்குடி தூய மரியன்னை கல்லூரி அணி சாம்பியன் கோப்பையை வென்றது.

நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு இடையிலான பெண்கள் கபடி போட்டி, தூத்துக்குடி தூய மரியன்னை கல்லூரியின் உள்விளையாட்டு அரங்கில் கடந்த 2 நாட்கள் நடைபெற்றது. இப்போட்டியில் தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தென்காசி ஆகிய 4 மாவட்டங்களை சேர்ந்த 36 கல்லூரி அணிகள் பங்குபெற்றன. நாக்அவுட் முறையில் நடைபெற்ற போட்டியின் இறுதி ஆட்டத்தில் தூத்துக்குடி தூய மரியன்னை கல்லூரி அணியும், வடக்கன்குளம் எஸ்ஏவி கல்லூரி அணியும் மோதின. இதில், 43:29 என்ற புள்ளி அடிப்படையில் தூத்துக்குடி தூய மரியன்னை கல்லூரி அணி வெற்றி பெற்று சாம்பியன் கோப்பையை தட்டி சென்றது. தொடர்ந்து நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உடற்கல்வி ஒருங்கிணைப்பாளர் ஆறுமுகம், தூய மரியன்னை கல்லூரி செயலாளர் சிபானா, முதல்வர் ஜெஸி பெர்னாண்டோ ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணிகளுக்கு கோப்பை மற்றும் சான்றிதழ்களை வழங்கினர். நிகழ்ச்சியில் கல்லூரி சுயநிதிப்பிரிவு இயக்குநர் ஜோஸ்பின் ஜெயராணி, துணை முதல்வர் குழந்தைதிரேஸ், ஒருங்கிணைப்பு செயலாளர் கிறிஸ்டி ஆனந்தி ஹேமலதா, பேராசிரியை எழிலரசி, மாவட்ட அமெச்சூர் கபடிக் கழக துணைத் தலைவரும், மரியன்னை கல்லூரி கபடி அணியின் பயிற்சியாளருமான கபடி கந்தன் என்ற ராஜா மற்றும் பேராசிரியர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தினகரன் தூத்துக்குடி



▸ தூத்துக்குடி தாய மரியன்னை கல்லூரியில் வேலைவாய்ப்பு முகாமை ஷிபானா துவக்கிவைத்து பேசினார்.

## தூத்துக்குடி கல்லூரியில் வேலைவாய்ப்பு முகா

தூத்துக்குடி, ஜூலை 1: தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் நான் முதல்வன் திட்டம் மாநில அளவிலான வேலை வாய்ப்புத் திட்டத்துடன் இணைந்து தூத்துக்குடி தூய மரியன்னை கல்லூரியில் வேலைவாய்ப்பு முகாம் நடந்தது. இந்த முகாமில் பல்வேறு துறைகளை சேர்ந்த 40க்கும் மேற்பட்ட நிறுவனங்களும் 300க்கும் மேற்பட்ட வேலை வாய்ப்பு தேடும் பட்டப்படிப்பு முடித்த இளைஞர்களும் பங்கேற்றனர். திருச்சிலுவை கல்லூரிச் செயலாளர் ஷிபானா துவக்கிவைத்துப் பேசினார். கல்லூரி முதல்வரான அருட்சகோதரி ஜெஸி பெர்னாண்டோ, சுயநிதி பிரிவு இயக்குநரான அருட்சகோதரி ஜோசப்பின் ஜெயராணி, துணை முதல்வரான அருட்சகோதரி எழிலரசி முன்னிலை வகித்தனர். முகாமில் தகுதிய... விண்ணப்பதாரர்கள்... பேருக்கு நியமன ஆ... வழங்கப்பட்டது.

இதற்கான ஏற்... களை நான் முதல்... வேலை வாய்ப்பு ... ளர் தினேஷ், தூ... யன்னை கல்லூ... தொழில் வழிகாட்... றும் வேலை வாய்ப்... வின் ஒருங்கிணைப்... ப்போர்ட்... வினர் இணைந்து ... குத்தனர்.

முதல்வரின் வருமுன் காப்போம் திட்டத்தின் கீழ்